செ.வெ.எண் :687 நாள்: 22.10.2021

**மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை குறைக்க புதியத் திட்டம் - ”இல்லம் தேடிக் கல்வி” என்னும் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொது முடக்கக் காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை குறைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ”இல்லம் தேடிக் கல்வி” என்னும் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அரசின் 100% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடியிருந்ததால் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வித் திறனில் எந்தவொரு குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :**

- கொரோனா பெருந்தொற்று பரவல் சார்ந்த பொது முடக்கக் காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளை சரிசெய்தல்.
- பள்ளி நேரத்தை தவிர மாணவர்களின் வசிப்பிடம் அருகே, சிறிய குழுக்கள் மூலம் தன்னார்வலர்களின் பங்கேற்புடன் மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்புகளை வழங்குதல்.
- மாணவர்கள் பள்ளி சூழலின்கீழ் ஏற்கனவே பெற்றுள்ள கற்றல் திறன்களை **”இல்லம் தேடிக் கல்வி”** திட்ட செயல்பாடுகளின் வாயிலாக மீண்டும் வலுப்படுத்துதல்.
- இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்துவதின் மூலமே மாணவர்கள் வரும் கல்வியாண்டில் அடுத்த வகுப்புக்கு செல்லும்பொழுது அவர்கள் அதற்கு முழு தகுதி படைத்தவர்களாக இருப்பார்கள்.

**”இல்லம் தேடிக் கல்வி”** திட்டத்தின் செயலாக்கமானது இக்கல்வியாண்டில் 6 மாதத்திற்கு, தினசரி குறைந்தபட்சம் 1 முதல் 11/2 மணி நேரம் (மாலை 5 மணி முதல் 7 மணி வரை) தன்னார்வலர்களின் மூலம் மாணவர்களை அன்றாட கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் படிப்படியாக பங்கேற்கச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**”இல்லம் தேடிக் கல்வி”** திட்டமானது தெரிவு செய்யப்பட்ட கீழ்காணும் 12 மாவட்டங்களில் இரண்டு வார காலத்திற்கு முன்னோட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு அதன் வாயிலாக கிடைக்கப்பெறும் சிறந்த கற்றல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**”இல்லம் தேடிக் கல்வி”** திட்டத்தை தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தும் வகையில் மாநிலம், மாவட்டம், ஒன்றியம் மற்றும் பள்ளிகள் என நான்கு நிலைகளில் செயல்பாட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டமானது ஒரு அரசுத் திட்டமாக மட்டுமல்லாமல் பெற்றோர்கள், பொது மக்கள், தன்னார்வலர்கள், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் பலத்துறையை சார்ந்த பிரபலங்கள் என அனைவரும் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் ஒரு இயக்கமாக திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் ”இல்லம் தேடிக் கல்வி” திட்டத்தை அனைவருக்கும் கொண்டு செல்ல கலைக்குழுவினர் உதவியுடன் பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் தீவிரமாக நடத்தப்பட உள்ளன. இதில் கிராம அளவில் சமூக பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் கீழ்காணும் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

- **சைக்கிள் பேரணி**
- **வீதி நாடகம்**
- **பொம்மலாட்டம்**

- **கதை சொல்லுதல்**
- **திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள்**

1 முதல் 5-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கற்பித்தல் செயலில் ஈடுபட உள்ள தன்னார்வலர்கள் 12 வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதை போலவே 6 முதல் 8-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கற்பித்தல் செயலில் ஈடுபட உள்ள தன்னார்வலர்கள் பட்டப் படிப்பு தகுதி பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

**"இல்லம் தேடிக் கல்வி"** திட்டத்தின் கீழ் பயிற்சி பணிமனை, விழிப்புணர்வு கலைப்பயணம் மற்றும் தன்னார்வலர்களுக்கான இணைய தளத்தை 18.10.2021 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார். இல்லம் தேடிக் கல்வி கையேடு பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப. அவர்களால் வெளியிடப்பட்டது.

இத்திட்டத்திற்கென சேவையாற்ற விருப்பமுடைய 38 மாவட்டங்களில் உள்ள தன்னார்வலர்கள் அனைவரும் தங்கள் விவரங்களை **illamthedikalvi.tnschools.gov.**in என்ற இணைதளம் வழியே கணினி மற்றும் Smart Phone மூலமாகவும் மற்றும் அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள Hi-Tech Labs மூலமாகவும் 18.10.2021 முதல் பதிவு செய்துகொள்ளலாம்.

பள்ளி மாணவர்களின் கல்வி நலனுக்காக செயல்படுத்தப்படவுள்ள இச்சிறப்புத் திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் அனைத்தையும் நகர்/ஊரகப் பகுதி மக்களிடையே எளிதாக கொண்டு சேர்க்கும் வகையிலும் மற்றும் இத்திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்கை மிக எளிதாக மக்களுக்கு உணர்த்தவும் இத்திட்டத்திற்கான இலட்சினை (Logo with Tag Line) மக்கள் பங்கேற்புடன் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான இலட்சினை (Logo with Tag Line) உருவாக்கும் போட்டி நடத்தப்படவுள்ளது. இதில் அனைத்து நகர்/ஊரகப் பகுதியில் உள்ள பள்ளி/கல்லூரி மாணவர்கள், பெண்கள், ஓய்வு பெற்ற ஊழியர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைத்து தரப்பினரும் தனிநபராகவோ அல்லது குழுவாகவோ பங்கேற்கலாம். வயது வரம்பு ஏதும் இல்லை.

போட்டியாளர்கள் தங்கள் இறுதி படைப்பினை **illamthedikalvi@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 24.10.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். போட்டியாளர்களால் தயாரித்து வழங்கப்படும் இலட்சினை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்தால் இறுதி செய்யப்படும். சிறந்த மற்றும் பொது மக்களுக்கு எளிய வகையில் புரிந்திடும் வகையிலான சின்னத்தை உருவாக்கும் ஒரு வெற்றியாளருக்கு ரூ.25,000/- ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மாவட்டக் குழுக் கூட்டம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பழைய பேருந்து நிலையம் முன்பு கலைக்குழு மூலம் தொடக்க விழா நடைபெற்றது. கலைக்குழுவினர் 3 குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் 5 ஒன்றியங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். ஒவ்வொரு நாளும் 2 பள்ளிகளிலும் 2 பொது இடங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். இதன் மூலம் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி வருகின்றனர்.

மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**